செ.வெ.எண் -03 நாள்: 02.11.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் நலன் காக்க சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்திட அரசு ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, அரியலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் எதிர்வரும் **09.11.2018** அன்று காலை 10.30 மணிக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான **சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்** நடைபெற உள்ளது. மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கைகள் மனுவில் குறிப்பிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல்இ குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் பாஸ்போட்சைஸ் போட்டோ(4) ஆகியவற்றை இணைத்து நேரில் அளிக்கலாம். இந்த கோரிக்கை மனுக்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட அலுவலர்களால் பரிசீலக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் நலத்திட்ட உதவிகள் வழங்க ஆவணச் செய்யப்படும். எனவே மாற்றுத்திறனாளிகள் இச்சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**